DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கருப்பசாமி பாண்டியன் | Father/Husband Name : தங்கசாமி |
| Age : 39 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23.02.2026

(Accused Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் சாத்தூர் அரசு மருத்துவமனை முன்பாக வைத்து மதியம் 03.00 மணியளவில் எனக்கும் ஆஜர் எதிரிக்கும் பேச்சுவார்த்தையின்போது கைகலப்பு ஏற்பட்டது. தற்போது நாங்கள் சமாதானம் ஆகிவிட்டோம். ஆஜர் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்க விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. (புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யயப்படுகிறது).

3. நான் தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரி என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. எதிரி தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன். (**சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

4. கடந்த 09.06.2023 ம் தேதி பகல் 03.10 மணியளவில் சாத்தூர் பழைய அரசு மருத்துவமனை பின்புறம் வைத்து ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் பேசி, கத்தியால் இடது கையில் குத்தி, கொலை மிரட்டல் விடுத்தாரா என்றால் இல்லை. தற்போது எதிரியுடன் சமாதானகிவிட்டு அவரை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை</u>**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur